Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ௵ அக்டோபர் ௴ 9உ, வெள்ளிக்கிழமை [இதழ் 40

## "வெளியூர் போகாதீர்கள்!"

## சென்னை வாசிகளின் கடமைகள்

### சென்னை அரசாங்கத்தார் செய்யும் நன்மைகள்

சென்ற எப்ரல் மாதம், ஜப்பானிய யுத்தக் கப்பல்களும், துருப்புகள் தாங்கிச் செல்லும் கப்பல்களும் வங்காளக் குடாக்கடலுக்கு வந்த போது, அரசாங்கத்தாரும் சென்னைப் பொது ஜனங்களும் அதி விரைவாக ஆலோசிக்க வேண்டியவர்களா யிருந்தார்கள். அப்போது வேண்டிய அளவுக்குத் தகுதியான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் படவில்லை. அந்த நிலைமையில், இதற்காக யாரையும் குற்றம் சொல்வதற் கில்லை. அரசாங்கத்தாரும், பொது ஜனங்களும் வெவ்வேறு விதமான அபிப்பிராயங் கொண்டிருந்தார்கள். இந்த மாறுபாட்டின் பயனாக எல்லோரும் திருப்தி யடைவ தென்பது முடியாத காரியம்.

ஆறு மாதங்கள் கடந்து விட்டன. தென்மேற்குப் பருவக் காற்றும் நின்று விட்டது. ஜப்பானியர்கள் பர்மாவிலும் அந்தமானிலும் இன்னும் இருக்கிறார்கள். முன்பு குழப்பத்தையும் துன்பத்தையும் உண்டாக்கியது போலவே இப்போதும் அவர்கள் உண்டாக்க கூடும் என்று ஜனங்கள் நினைப்பது சகஜம் தான். இதற் கிடையில் இப்படிப் பட்ட நிலைமை ஏற்பட்டால், அதைச் சமாளிக்க என்னென்ன ஏற்பாடுகளை அரசாங்கத்தார் செய்திருக்கிறார்கள் என்று அறியாமல் மயங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஏராளமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பது தான் இதற்குச் சரியான பதில். ஜப்பானியர்கள் இந்தியாவை படையெடுத்துத் தாக்கலாம், அல்லது எப்போதாவது சிலமுறை விமானத் தாக்குதல்கள் நடத்தலாம். ஆனால் இந்த நிலைமை இன்னும் வெகு தூரத்தில் இருக்கிறது. இருந்த போதிலும், அபாயம் இருக்கிறது என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். இந்த அபாயத்தைப் பற்றி பொது ஜனங்கள் ஒரு விஷயத்தை அறிந்து தைரியங் கொள்ள ஆசைப் படுவார்கள். அது என்னவென்றால், சிவில், ராணுவ, தேசியப் போர் இலாக்காக்களைச் சேர்ந்த அதிகாரிகள் பாதுகாப்பு சம்பந்தமான தங்களுடைய அபிப்பிராயங்களை ஒரு பொது ஏற்பாடு அமைப்புத் திட்டமாக ஒன்று சேர்த்திருக்கிறார்கள்; அவைகள் சந்தர்ப்பங்கள் ஏற்படும் போது உடனே அமுலுக்குக் கொண்டு வரப்படும்; என்பது தான். அம்மாதிரியான சந்தர்ப்பங்கள் ஏற்படமாட்டா என்று நாம் நியாயமாக நம்புவதற்கு இட மிருக்கிறது. இருந்த போதிலும், அபாயம் இருக்கும் வரையில் அப்படிப் பட்ட சந்தர்ப்பங்கள் நேரக் கூடும்.

இதில் இரண்டு விஷயங்களை முக்கியமாகக் கவனிக்கவேண்டும். முதலாவது: பொது ஜன அமைதி; இரண்டாவது: இராணுவத் திறமை. பொது ஜன அமைதியை யொட்டித் தான் இராணுவத் திறமை ஏற்படும். இந்த மாகாணத்தி லுள்ள ஜில்லாக்களில், தைரியமா யிருக்கும்படி தேசீயப் போர் முனைக்காரர்கள் எடுத்துச் சொல்லி, ஜனங்கள் மனதில் ஒரு வித ஊக்கத்தை ஊட்டிக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, இந்தக் கட்டுரை வெளி வரும் இந்தச் சமயம் சென்னை நகர வாசிகளுக்குக் கூட மிகவும் பொருத்தமானது தான். தைரியமாய் இருக்க வேண்டி நாம் என்னென்ன செய்ய நேர்ந்தாலும், "தைரியமா யிருங்கள்" என்ற பல்லவியை எல்லோரும் பாடலாம். இல்லை யானால், சென்ற எப்ரல் மாதம் ஏற்பட்டது போல், பொது ஜனங்கள் எந்த ஊருக்குப் போய் உயிர் தப்புவது என்று தெரியாது திகைப்பார்கள். பல வகைக் கஷ்டங்களுக்கு உள்ளாவார்கள். இப்படி வெளி யேறிப் போவதனாலும் அவர்களுக்கு எந்த வகையான நன்மையு மேற்படாது.

அதிகாரிகளின் கட்டளை யில்லாமலும், தகுந்தபடி ஆராய்ந்து பார்க்காமலும் பொது ஜனங்கள் ஊரை விட்டுக் காலி செய்து கொண்டு வெளியூருக்குப் போனால் என்ன நேரும் என்று பொது வாகக் கவனிப்போம், சாதாரண வாழ்க்கை அடியோடு ஸ்தம்பித்து விடும். தொழிற் சாலைகள் நின்று விடும். அதை யொட்டி சப்ளைகளும் நின்று விடும். இதனால் போராட்டத்திற்குக் குந்தக முண்டாகும். போர் முயற்சியும் மிகவும் தடைப் படும். பொது ஜனங்களுக்கு உபயோகமாக உள்ள வேலைகளைச் செய்து கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் அவரவர்கள் வேலை செய்யும் ஊர்களிலேயே இருந்து விட வேண்டியது அவர்கள் கடமை யாகும். மிகவும் சிறு குழந்தைகளா யிருப்பவர்கள், மிகவும் வயதானவர்கள், பெண்களை வெளியூர்களுக்கு அழைத்துப் போய் அவர்களுக்குத் துணையாக இருக்க வேண்டிய நிர்ப்பந்த நிலைமையி லுள்ளவர்கள் மட்டும் இதற்கு விதி விலக்காவார்கள். இங்கே வேலைகள் கிடைக்கின்றன. தேவையான பொருள்கள் இருக்கினறன. கடைகள் திறந்திருக்கின்றன. கடைகளில் வியாபாரம் செய்கிறவர்களும் இருக்கின்றார்கள். விமானப் பாதுகாப்புப் படையின் பராமரிப்பும் இருக்கிறது. வைத்திய உதவியும் போலீசார் காவலும் உண்டு. இவ்வளவு வசதிகளையும் விட்டு விட்டு, வீடு வாசலில்லாமல், பாதுகாப்போர் யாருமில்லாமல், பசியோடு, 'நடுத் தெரு நாராயணா' வென்று ஊர் பெயர் தெரியாத ரயில்வே ஸ்டேஷன்களிலும், அளவிற்கு மீறி ஜனங்கள் குடி யேறி யுள்ள கிராமங்களிலும் போய் திண்டாடுவது கூடாது என்று பொது ஜனங்கள் தெளிவாக உணர வேண்டும். சுருங்கச் சொன்னால் சென்னை வாசிகள் தைரியமாக உள்ளூரிலேயே யிருப்பார்களானால் வழக்கம் போல் வியாபாரம் நடை பெறும், வாழ்க்கை இனிதா யிருக்கும். அவரவர் எண்ணப்படி செய்ய இட முண்டு.

இரண்டாவது விஷயம் இராணுவத் திறமை. இது பற்றி பொது ஜனங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்க நியாய மில்லை. என்றாலும், இது மிகவும் முக்கியமானது தான். நமது பாது காப்பிற்காகவும் எதிரிகளை யழிப்பதற்காகவும், பெரும் படையை நாம் இங்கே வைத்திருக்கிறோம். சமீபத்தில் இந்தப் படையின் ஒரு பகுதி பெரும் ஊர்வலமாகச் சென்னை தெருக்களில் வந்தது. ஒரு படை திறமை யோடு வேலை செய்ய வேண்டுமானால், எந்த விதத் தடையுமில்லாமல் வேகமாகப் போவதற்கு எவ்வளவு இடம் வேண்டி யிருக்கும் என்று சாதாரணமாக பொது ஜனங்களுக்குத் தெரிவதில்லை. சென்னையை யடுத்திருக்கும் பல விடங்களிலும் ஒரு பெரும் படை யிருக்கிறது. ரயில்வேக்கள், ரோடுகள், பாலங்கள், தந்தி லைன்கள் ஆகிய எல்லா போக்கு வரவுச்

சாதனங்களையும் எந்த விதத் தடையுமின்றி இராணுவ அதிகாரிகள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது கொள்கை. இந்தப் போக்கு வரவு சாதனங்களில் பொதுஜன நடமாட்டம் அதிக மிருக்கும்படி அனுமதிக்க அவர்களால் முடியாது. அநேக ஜட்காக்கள், மாட்டு வண்டிகள், பொதி மாடுகள், சாமான்களை ஏற்றிப் போகும் கை வண்டிகள் முதலியவற்றை ஏராளமாகப் போகும்படி அனுமதித்தால், போர் முனைக்கும் போகும் படைகளின் வேகம் தடைப் படும். எதிரியின் படைகளை வெல்லுவதற்குப் பொது ஜனங்களிடமும் ஒரு ஆயுதம் இருக்கிறது. அதுதான் இராணுவங்களுக்கான வசதிகளைச் செய்து கொடுப்பது. ஜப்பானியர்கள் வாராத போனாலும் கூட, நம் படைகளை நாம் ஆயத்தமாகவே வைத்திருக்க வேண்டி யிருக்கிறது. படையினர் தம் கடமைகளை நாள் தோறும் நிறைவேற்றுகிறார்கள். பெருந் தொகையினராக ஓரிடத்திலிருந்து வேறோர் இடத்திற்கு அடிக்கடி போய்க் கொண்டிருக்கிறார்கள். இத்தனையும் பொது ஜனங்களின் சௌகரியத்திற்காகவும் அவர்களைக் காப்பாற்றும் பொருட்டாகவும் தான். ஆகவே எல்லா வகைகளிலும் படைகளுக்கு முதல் இடமும் பொது ஜனங்களுக்கு இரண்டாவது இடமுந் தான் கொடுக்கப்பட வேண்டும்.

இது ஒரு குற்ற மற்ற யோசனை. ஏதேனும் ஆபத்தான நிலைமை ஏற்பட்டால், இராணுவ வேலைகளுக்கும் பொது ஜன வேலைகளுக்கும் தடங்கல் ஏற்படாதபடி நடந்து கொள்ள வேண்டிய அளவிற்கு, சென்னை வாசிகள் தைரியமா யிருப்பார்களா ?

விமானங்களி லிருந்து எதிரிகள் நம்மைத் தாக்கியதாகவும், அதனால் பெரும் பீதி ஏற்பட்டு விட்டதாகவும், சந்தேகப் பேர்வழிகள் நினைத்துக் கொள்ளட்டும். அப்போது, எதிர் பார்த்ததை விட அதிகமாகவே, பெண்களும் குழந்தைகளும், கிழவர்களும், நோயாளிகளும் அதிக பந்தோபஸ்தான இடங்களுக்கு உடனே ஏக காலத்தில் கிளம்பிப் போய்விட்டதாகவும் அவர்கள் நினைக்கலாம் “இதுபற்றி அரசாங்கத்தார் என்ன சாதித்து விட்டார்கள்” என்று பொதுவாக ஜனங்கள் கேட்பதுபோலவே அவர்களும் கேட்பார்கள். அரசாங்கத்தார் தாம் என்னென்ன செய்திருக்கிறார்கள் என்று ஏற்கெனவே பிரசுரித்திருக்கிறார்கள். இவற்றை அநேகர் மறந்து விட்டார்கள். எதிரிக் கப்பல்கள் வங்காளக் குடாக் கடலுக்குள் வருவதற்கு 2 மாதங்களுக்கு முன்பே பெரிய முகாம்களை அரசாங்கத்தார் கட்டினார்கள். அங்கே சாப்பாடு, தண்ணீர், வைத்தியம், சுகாதாரம் முதலிய வசதிகளையும் அமைத் திருந்தார்கள். இந்த முகாம்களுக்குச் சென்னையி லிருந்து 24 மணி நேரத்தில் நடந்து போய்ச் சேர்ந்து விடலாம். இப்படி 6 முகாம்கள் அமைத் திருந்தார்கள். அப்போது 360,000 பேர்களுக்கு அரிசி, காய்கறி, தண்ணீர், இருப்பிடம், முதலியவற்றை வாரத்திற்கு உதவுகிறதற்குத் தகுந்தபடி ஏற்பாடு செய்திருந்தார்கள். முன்பு இந்த முகாம்கள் அமைக்கப் பட்டிருந்த இடத்தை விட்டு வேறிடத்திற்கு இதை மாற்றி யிருக்கலாம். இவற்றில் எத்தனை நாட்கள் தங்கி யிருக்கலாம் என்பதைப் பற்றிய விதியும் மாறி யிருக்கலாம். இப்போது 6 மாத சவகாசம் கிடைத்திருந்தது. இப்போது இந்த முகாம் ஏற்பாடுகள் முன்னைய விட மேலான முறையில் தான் இருக்குமென்று நிச்சயமாக நம்பலாம்.

மேற்கே போகிற ஒரு ரஸ்தாவில் 20 மைல்களுக்கு ஒரு முகாம் ஏற்படும். இந்த ரஸ்தாவின் பெயர் ஏற்ற சமயத்தில்தான் பிரசுரிக்கப்படுமே யொழிய இப்போது அறிவிக்கப்பட மாட்டாது. ஆனால் ரயில் வண்டிகளை அவர் எதிர் பார்க்க முடியாது. அவசியமான வேலைகளுக்காகவும் இராணுவத் தேவைகளுக்காகவும் எல்லா வண்டிகளையும் இராணுவ அதிகாரிகள் பேசிவிட்டார்கள். அல்லாமலும் இவர்கள் பிரயாணம் செய்யும் பாதை இராணுவப் போக்கு வரவுகளைத் தடை செய்யாத பாதையாக இருக்க வேண்டும். சுமைகளை அதிகமாகத் தூக்கிக் கொண்டு போக முடியாது. மாட்டு வண்டியோ ஜட்கா வண்டியோ அங்கே கிடையாது. வேறெந்த வகை வண்டியும் கிடைக்காது. என்றாலும், மோட்டார் வண்டிகள் ஒரு சில இடங்களில் கிடைக்கலாம். என்றாலும் ஒரு ஊரை விட்டு மற்றொரு ஊருக்கு அவை வெகு விரைவில் போய் விடும். சைகில் வண்டியில் போகிறவர்கள் நெடுந் தூரம் போக வேண்டி வரும். ஏனென்றால் இந்த முகாம்களில் அவர்களை ஒரு இரவிற்கு மேல் தங்க அனுமதிக்க மாட்டார்கள். ஆம். மிகுந்த அசௌகரியந்தான். என்றாலும், அவசியம் நேரும் போது எப்போது, எப்படி வெளியேறி விட வேண்டுமென்று சென்னை வாசிகளுக்கு அறிவிப்பதாக அரசாங்கம் ஒப்புக் கொண்டிருக்கிறது. இப்படிப் பட்ட தேவை ஏற்படுவதற்கு முன்னதாகவே இப்போது செய்யப் பட்டிருப்பதை விட அதிகமாக வேறு என்ன தான் அரசாங்கம் செய்ய முடியும் ?

1. ஆபத்துகள் ஏற்படுமானால் (எதுவும் ஏற்பட இட மில்லை என்றுதான் மீண்டும் சொல்லுகிறோம்) ஒவ்வொரு ஆண்மக்களும், தன் கடமையையும், அறிவையும், அரசாங்க விருப்பத்தையும் இராணுவம் திறமையோடு வேலை செய்ய வேண்டிய அவசியத்தையும் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். தம் நண்பர்களுக்கும், ஆபீசிலுள்ளவர்களுக்கும், வேலைகளி லிருக்கிறவர்களுக்கும், இனத்தாருக்கும் தைரிய மூட்ட வேண்டும்.

2. பொய் வதந்திகளை நம்பி பீதி கொண்டவர்கள் வெளியூர்களுக்குப் போய் விட வேண்டுமென்று முடிவு செய்வார்களானால், அதற்கும் அரசாங்கத்தார் ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

3. பெருந் தீமை நேருமானால், இந்தப் பழமையான நகரத்தை நாம் காலி செய்ய நேரும். (அப்படிபட்ட நிலமை ஏற்படாதபடி கடவுள் காப்பாற்றுவாராக!) அரசாங்கமும் வெளியேறுவதற்கு ஆயத்தமா யிருக்கிறது.

4. இந்த யுத்த காலத்தில் இத்தனையும் அரசாங்கத்தாரின் தேவையைப் பொருத்துத் தான் இருக்கின்றன. புத்திசாலித் தனமாகப் பொது ஜனங்கள் நடந்து கொண்டால், பொது ஜனங்களின் பாதுகாப்பை முன்னிட்டு சிவில் அரசாங்கம் செய்திருக்கும் ஏற்பாடுகளில் இராணுவம் குறுக்கிடாது. ஆனால் பொது ஜனங்கள், அவர்கள் போராட்டத்திற்கு எந்த விதமானத் தடைகளையும் உண்டாக்கக் கூடாது: போக்குவரவு சம்மந்தமாக ஏற்படும் விதிகளை அமுல் நடத்துவதில் ஒரு படை வீரர் எப்படி கட்டளை யிடுகிறாரோ, அது போலவே பொது ஜனங்களும் நடக்க வேண்டும். சென்னை நகரத்திலும் மாகாணத்திலுமுள்ள நாம் ஒவ்வொருவரும் போராடிக் கொண்டிருக்கிறோம். இந்த யுத்தம் உலக யுத்தம். உலக யுத்தம் என்றால் என்ன என்பதைக் குறித்து நாம் ஓரளவிற்கு இப்போது எழுதி யிருக்கிறோம்.

# யுத்தப் போக்கு.

பத்திரிகை நிருபர்களுக்கு இந்திய பிரதம தளபதி ஜெனரல் வேவல் பேட்டி கொடுத்த போது பேசிய முழு விவரங்களும் சென்ற வார வெளியீட்டில் பிரசுரித்திருந்தது. அப்போது, இது வரை இந்தியாவைப் பாதுகாத்துக் கொண்டிருந்த நாம், இனி எதிரியைத் தாக்க ஆரம்பிக்கிறோம் என்று தெளிவாக அவர் குறிப்பிட்டிருந்தார். தன் கருத்துக்களைச் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதில் அவர் மகா நிபுணர். எதிர் காலத்தில் செய்ய வேண்டிய எல்லாவற்றையும் மிகவும் எச்சரிக்கை யோடு தான் ஆலோசித்துச் செய்கிறார். எதிரிகள் கொஞ்சங் கூட எச்சரிக்கை பெறுதபடி, திடீரென்று எக்காரியத்தையும் செய்து முடிக்கிறார். இவர் இப்போது பர்மாவைத் தாக்க இந்தியா ஆயத்தமாக வேண்டுமென்று கூறுகிறார். பர்மாவி லிருந்து ஜப்பானியர்கள் இந்தியாவைத் தாக்கவும் கூடும். இதில் ஒரு விஷயம் முக்கியமானது. இந்தியாவி லிருந்து பர்மாவை நேச நாடுகள் நிச்சயமாகத் தாக்கக் கூடும் என்றேற்பட்டு விட்டது.

ஆறு மாதங்களுக்கு முன்னால் இதே ஜெனரல் வேவல் பேசும் போது, மலேயாவில் நேர்ந்த தவறுகளைத் தானே ஏற்றுக் கொண்டார். இன்னும் என்னென்ன நஷ்டங்கள் ஏற்படக் கூடுமென்றும் தெரிவித்தார். இப்படிக் கிருந்துங் கூட, அவர் பேச்சை அப்போது கேட்டவர்களுக்கு அவருடைய திறமையைப் பற்றி முழு நம்பிக்கை ஏற்பட்டது. நாம் பர்மாவை மீண்டும் கைப்பற்றி குடியேறிவிடுவோமென்று அவர் கூறியுள்ள வார்த்தைகள், அவருடைய மன உறுதியைக் குறிக்கின்றன. இதன் பொருட்டு நெடு நாட்களாக ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்ததாகவும் குறிப்பிடுகிறார். இதிலிருந்து கூடிய சீக்கிரத்தில் முக்கியமானதோர் போராட்டம் ஏற்படப் போகிறதென்று தெரிகிறது. இதன் பயனாக மிகச் சிறந்த பலன்கள் உண்டு.

சமீபத்தில் வின்டெல் வில்கி சூங்கிங் நகரத்திற்குச் சென்றிருந்தார். அப்போது அவர் கூறியதாவது :—

"ஆசியாவில் நேச நாடுகள் தைரியமாகத் தாக்க வேண்டியது மிகவும் அவசியந் தான். இது இரண்டாவது போர் முனையை ஆரம்பிப்பதற்குச் சமமாகும்."

இதே கருத்தைத் தான் ஜெனரல் வேவலும் கூறியிருக்கிறார். இந்தியாவில் தரைப் படை வலுத்துக் கொண்டு வருகிறது. நேச நாடுகளின் விமான பலமும் படிப்படியாக உயர்ந்து கொண்டு வருகிறது. பர்மாவை விட்டு ஜப்பானியர்களை விரட்டியடிக்க வேண்டும். சீனாவோடு போக்கு வரவிற்கு ஏற்பாடுகளை செய்து கொள்ள வேண்டும்.

### நாச கால வேலை.

ஜப்பானியர்களின் அக்கிரமங்களைத் தடுக்க வேண்டி சீனா மிகவும் சிறந்த முறையில் போராடிக் கொண்டிருக்கிறது. சமீபத்தில் 'சீனாவிற்கு ஐக்கிய உதவி நிதிக் கூட்டம்' என்று ஒன்று நடைபெற்றது. அப்போது சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் கூட வந்திருந்து பேசினார். சீன தூதரான டாக்டர் வெல்லிங்டன் கூவும் அங்கு வந்திருந்தார். அவர் கூறியதாவது :—

மிகவும் பலசாலியான எதிரியோடு சென்ற ஐந்து வருஷங்களாக சீனா போராடிக் கொண்டிருக்கிறது. சம பல மில்லாத இரு கட்சியினர் இவ்வளவு காலம் போராடிக் கொண்டிருந்தது, உலக சரித்திரத்திலேயே கிடையாது. தற்போது மிகவும் கஷ்டங்களும் தொல்லைகளும் உண்டானாலும், தம் கட்சி மிகவும் நியாயமான கட்சி என்று சீனர்கள் களக்க மற உணர்ந்து கொண்டார்கள். எதேச்சையை நாடும் உலக மக்கள் அனைவருடைய கட்சியும் இதுதான் என்றும் உணருகிறார்கள். அநாகரிகக் கொடுங்கோலர்களான ஜப்பானியர்களோடு இது வரை தனித்திருந்து போராடிய சீனர்களுடன் ஜனநாயக நாடுகள் சேர்ந்து விட்டன. இது பெரிதும் சந்தோஷப் படத்தக்க செய்தியே. நேச நாடுகளெல்லாம் கூடி நடத்தும் போராட்டத்தில் சீனாவும் தன் கடமையைச் சரிவர நிறைவேற்ற இது மிகவும் ஊக்கந் தரும். இந்த யுத்தத்தின் முக்கியமான பகுதி நாச கால வேலை தான். இந்த முறையைத் தான் சீனர்கள் பின் பற்றுகிறார்கள். ரஷ்யர்களும் கூடத் தான். இந்தியாவில் இந்தக் கொள்கையைப் பற்றி கருத்து வேற்றுமைகள் அதிகமாயிருக்கின்றன. இதை ஆதாரமாகக் கொண்டு அச்சு நாட்டு அரசாங்கங்கள் புளுகத் தலைப்படுகின்றன. இது இந்தியாவிற்கு ஏற்ற முறையல்ல என்று கூறுகிறார்கள். பாலங்கள், ரயில்வேக்கள், வெடி மருந்து தொழிற்சாலைகள் முதலிய இராணுவ சம்மந்த முள்ள முக்கியமான இடங்களை அழித்து விடுவதோடு, பயிர்களையும் பண்ணைகளையும் கூட, அதாவது கிராமப் புரங்களையே அழித்து விட வேண்டும். அன்றியும், சீனர்கள் தம் இருப்பிடத்தை விட்டு விட்டு மேலைச் சீனாவிற்குக் குடியேறியதை போல், இடம் பெயரவும் வேண்டும். இதற்குத் தான் நாச கால வேலை என்று பெயர். நாச கால வேலைக்கும், எதிரிகளுக்கு எந்த வகை உதவியும் கிடைக்காமற் செய்து விடுவதற்கும் வேற்றுமை யுண்டு. இதைப் பற்றி விளக்கி சென்ற செப்டம்பர் மாதம் 26-ம் தேதி இந்தியா மேல் சபையில் ஜெனரல் ஹார்ட்லி தெளிவாக எடுத்து விளக்கினார். அவர் கூறியதாவது :—

"நாசகால முறையைக் கையாளுவதற்குப் பதிலாக, எதிரிகளுக்கு எந்த வகை வசதிகளும் கிடைக்காதபடி செய்துவிடக் கூடியது தான் நம் கொள்கை. இதன்படி எதிரிகளுக்குக் கிடைக்கக் கூடிய எல்லா உதவிகளையும் நாசஞ் செய்து விட வேண்டும். ஆனால் பொது ஜனங்கள் வாழ்விற்குத் தேவையான பொருள்களைக் கூட நாசஞ் செய்வது தான் நாச கால வேலை. ஆகவே இவ்விரண்டு முறைகளுக்கும் மிகுந்த வேற்றுமை யுண்டு.

### இந்தியாவில் கலகத்தை எப்படி ஒடுக்குகிறார்கள்.

அச்சு நாட்டு முழுப் புளுகு ஒன்றை ஜெனரல் ஹார்ட்லி மறுத்தார். இந்தியாவிலுள்ள சில நகரங்களையே இந்திய அரசாங்கம் வெடி குண்டுகளை எறிந்து நாசம் செய்ததாக எதிரி ரேடியோக்கள் புளுகின. இது பற்றி அவர் கூறியதாவது :—

சென்ற ஆகஸ்ட்டு மாதம் 9-ம் தேதி பீஹாரிலும், வங்காளத்திலும் உள்ள 4 ஊர்களிலும், சமஸ்தானத்தைச் சேர்ந்த ஒரு ஊரிலும் கலகக் கூட்டத்தை ஒடுக்க வேண்டி ஆகாயத்தி லிருந்து மிஷின் பீரங்கிகளை உபயோகிக்க நேர்ந்தது. இங்கே வெடி குண்டு எதையும் எறியவில்லை. இங்கெல்லாம் மேலும் கலகம் நேராமல் தடுக்கத்தான் மிஷின் பீரங்கிகளை உபயோகித்தார்களேயொழிய கலகம் செய்தவர்களைத் தண்டிப்பதற்காக வல்ல. விமானத்திலுள்ள மிஷின் பீரங்கிகளைக் கொண்டு கலகக்காரர்களின் தலை மேலும் அவர்களுக்கு உதவி செய்கிறவர்கள் தலை மேலும் சுடலாம். அதாவது உண்மையிலேயே கலகம் செய்து கொண்டிருக்கிறவர்களின் தலை மேலேயே சுடலாம். அப்போது நிதான மில்லாமலும் கணக்கு வழக் கில்லாமலும் சுடுவ தில்லை. மிகவும் எச்சரிக்கையுடனே தான் சுட்டார்கள். வெடிகுண்டு எறிந்தால் ஜனங்களுக்குக் கட்டாயம் காயப் படும். ஜனங்களைப் பயமுறுத்தும் பொருட்டு வெடிகுண்டுகளை எறியக் கூடாது. பொது ஜனங்கள் வசிக்கும் இடங்களில் வெடி குண்டுகளை வீசுவது என்றால், நிதான மில்லா

மல் வீசுவது என்று தான் ஓரளவிற்கு அர்த்த மாகும்: நேச நாட்டுப் போர் முறைக்கும் அச்சு நாட்டுப்போர் முறைக்கும் எவ்வளவு வேற்றுமை யுண்டோ, அவ்வளவு வேற்றுமை, ஆகாயத்தி லிருந்து மிஷின் பீரங்கியால் சுடுவதற்கும் வெடி குண்டுகளை எறிவதற்கும் உண்டு. 'எம் விமானங் களி லிருந்து வெடி குண்டுகளை எறிந்தும், டாங்கி களைக் கொண்டும், தம் வயப்பட்ட ஐரோப்பிய நாட்டு மக்களைப் பணியச் செய்துவிடுவேன்' என்று ரிப்பன்ட்ராப் என்னும் ஜெர்மன் தள கர்த்தர் கூறிய வார்த்தைகளை இங்கே ஞாபகப் படுத்தலாம். இது நிதான மில்லாமல் பீதியை யுண்டாக்கும் முறை. இந்தியாவில் கையாளப் படுவது, மேலும் கலகங்கள் நேர ஓட்டாதபடி நிதானத்தோடு தடுக்கும் முறை. அதாவது கலகத்தை ஒடுக்க எந்த அளவிற்கு பலாத்காரம் தேவையா யிருந்ததோ, அந்த அளவிற்கு மட் டுந் தான் அதை உபயோகித்தனர்.

## ஜப்பானின் எண்ணம் என்ன ?

இனி ஜப்பான் என்ன செய்யப்போகிறது ? கீழைக் கோடியில் பல சம்பவங்கள் நடை பெறுகின்றன. அமெரிக்காவிற் கும் ஆஸ்திரேலிய தளங்களுக் கும் போக்கு வரவு நடப்பதை வெட்டி விட ஜப்பானியர்கள் மிகவும் முயற்சிக்கிறார்க ளென்று தெரிகிறது. பசிபிக் மகா சமுத்திரத்தின் தென் மேற்கு பகுதி யில் ஜப்பானியப் படைகள் திரண்டிருக்கின்றன. சாலமன் தீவுகளை மீண்டும் கைப்பற்ற ஜப்பான் அரும்பாடு பட்டுக் கொண்டிருக்கிறது. மார்ஸ்பி துறைமுகத்தைப் பிடிக்க வேண்டு மென்று ஜப்பான் உறுதி கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இவற்றைக் கொண்டு ஜப்பானின் எண்ணம் என்ன வென்று நிர்ணயிக்கக் கூடும். தாம் கைப்பற்றிய நாடுகளை யாவது காப்பாற்றிக் கொள்ள வேண்டுமே என்பது தான் அவர்களுடைய பெருங் கவலை. அவர்கள் பெரிய சாம்ராஜ்யத்தை வென்று விட்டார்கள். இது இந்தோ சீனாவிலிருந்து இந்தோ பர்மிய எல்லை வரையிலும், பிலிப்பைன் தீவுகளிலிருந்து நியூ கினியா வரையிலும் பரவி யிருக்கிறது. நான்கு புரங்களிலு மிருந்து இந்தப் பகுதியைத் தாக்கலாம். வடக்கே விலாடிவாஸ்டாக் கிலிருந்தும், கிழக்கே பசிபிக் பெரும் படையும், தெற்கே இந்தோ-பர்மா எல்லைப் புரத்திலிருந்தும் தெற்கே ஆஸ்திரேலியா விலிருந்தும் தாக்கலாம்.

ஜப்பானுக்கும் ரஷ்யாவிற்கும் யுத்தம் மூண்டால் மட்டுந் தான் விலாடிவாஸ்டாக்கி லிருந்து ஜப்பான் தாக்கப் படலாம். சென்ற சில வாரங்களாகவே சைபீரியாவை ஜப்பான் தாக்கப் போவதாக வதந்தி கள் பிறந்தன. தம் மொத்த தரைப் படைகளில் மூன்றி லொரு பகுதியை ஜப்பான் வட கோடி யில் ஆயத்தப் படுத்தி வைத்திருக்கிறது. ஜப் பான் அந்நிய நாட்டு மந்திரி டோகோவை வேலையை விட்டு நீக்கி விட்டார்கள். ரஷ்யாவோடு போராடக் கூடாது என்பது ஜப்பானியர்கள் கொள் கையாம். டோகோவை வேலையை விட்டு நீக்கி விட்டதனால், இந்தக் கொள்கையில் மாறுதல் உண்டா கும் என்று நினைக்கக் கூடா தென்று ஜப்பான் அர சாங்கத்தார் கூறுகிறார்கள். ஜப்பான் பிரதிநிதிகள் வாஷிங்டனில் சமரசம் பேசிக் கொண்டிருக்கும் போதே, பெர்ல் துறைமுகத்தை அவர்கள் தாக்கியது ஞாபகமிருக்கலாம். அந்த அளவிற்குத் தான் இந்த ரஷ்ய ஜப்பான் ஒப்பந்தத்தையும் ஜப்பானியர் மதிப் பார்கள் என்று நினைக்க வேண்டும். எது எப்படி இருந் தாலும் சோவியத் ரஷ்யா எதற்கும் ஆயத்த மாகத் தான் இருக்கிறது. கீழ்க் கோடி யிலுள்ள செஞ் சேனைகள் எண்ணிக்கையிலும் ஆயுத பலத்திலும் மிக உயர்ந்திருக்கின்றன. இப்போது ஸ்டேலின் கிராடிற்குப் போயிருக்கும் படைகள் மேற்குச் சைபீரி யாவைச் சேர்ந்தவை. கிழக்குச் சைபீரியாவைச் சேர்ந்தவை யல்ல. இதிலிருந்து, ஜப்பான் உடனே சைபீரியாவைத் தாக்காது என்றும் முடிவு கட்டி விடக் கூடாது. விலாடிவாஸ்டாக்கி லிருந்து கடல் மூலமாகவும் விமான மூலமாவும் டோக்கியோ முதலிய நகரங்களைத் தாக்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டியது ஜப்பானின் முதல் கடமை யாகும். ஒரு வருஷத்திற்கு முன்னதாகவே ரஷ்யாவின் மேற்குப் பாகத்தில் பலமான சேனை யிருந்தது. அப்போது ரஷ்யர்கள் விரும்பி யிருந்தால் ஜப்பானைத் தாக்கி யிருக்கலாம் ; ஆனால், தாக்க வில்லை. இப் போது வாழ்வதா சாவதா எனத் தக்க முறையில் அச்சு நாட்டுப் படைகளோடு, ரஷ்யா போராடிக் கொண்டிருக்கிறபோது எப்படித் தாக்கும் ?

ஜெர்மனி எந்த அளவிற்கு ரஷ்யாவை இடுப்பு உடைக்கும் ? தெற்கேயும் மேற்கேயும் நேசநாடுகள் ஜப்பானுக்கு எந்த அளவிற்கு நெருக்கடியை உண் டாக்கும் ? இவ் விரண்டையும் ஒட்டித் தான் ஜப்பா னின் போக்கு அமையு மென்று தெரிகிறது. சைபீரி யாவைத் தாக்குவதனால் ஜப்பான், தனக்கும் அச்சு நாடுகளுக்கும் நன்மைகளைத் தேடிக் கொள்ள வேண்டும். பணம் ஒன்றே பெரிது என்று மதிப்ப வர்களின் கொள்கை இது தான். சைபீரியாவைத் தாக்கும்படி ஜப்பானை ஜெர்மனி வற்புறுத்திக் கொண்டிருப்பதாக, யுத்தத்தில் கலக்காத நாடு களி லிருந்து செய்தி கிடைக்கிறது. என்றாலும் இந்த வதந்திகளை முழுவதும் உண்மை என்றும் அர்த்தம் செய்து விடக் கூடாது. ஜப்பான் வடக்கே போய்த் தாக்க வேண்டு மென்பது அச்சு நாடுகளின் ஏற்பாடு என்ற எண்ணத்தை யுண்டாக்கினால், ஜெர்மனிக்குத் தான் சௌகரியம்.

நிற்க, இந்தியாவை ஜப்பானியர் ஒரு பெரும் படை கொண்டு தாக்குவார்கள் என்று நினைப்பதற்கும் இட மில்லை. ஏனென்றால், தாம் ஜெயித்த பர்மாவைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு ஜப்பானி லிருந்து அதிகம் படைகளை அனுப்பி இந்தோ-பர்மிய எல்லைப் புரத்தில் தகுந்த பாதுக்காப்புகளை இன்னும் ஏற் படுத்திக் கொள்ள வில்லை. அல்லாமலும் சேக்யாங் மாகாணத்தி லிருந்த தம் படைகளையும் தருவித்துக் கொண்டார்கள். சீனர்களிட மிருந்து கைப்பற்றிய 'பாம்ப்-டோக்கியோ' விமான தளங்களையும் விட்டுக் காலி செய்து விட்டார்கள். இதற்குப் பிறகு, சூங்கிக் நகரத்தைத் தாக்கப் போவதாக ஜப்பான் ஒரு தரம் கூடக் கூறத்துணியவில்லை.

## மோர்ஸ்பி மீது ஜப்பான் கண்ணோட்டம்.

ஜப்பானியர்கள் தம் முழு கவனத்தையும் தென் மேற்குப் பசிபிக் பகுதியில் தான் செலுத்திக் கொண்டிருக்கிறார் கள். ஜப்பான் கை ஓங்க வேண்டு மானால், நியூ கினியா வையும், அதன் முக்கியமான துறை முகமான மார்ஸ்பியையும் வென்று கைப்பற்ற வேண்டும். சாலமன் தீவுகளை யும் மீண்டும் கைப்பற்ற வேண்டும். அமெரிக்காவும் ஆஸ்திரேலியாவும் பலம் மிகுந்த நாடுகள். இவற் றோடு போராட வேண்டிய நிர்பந்தம் ஜப்பானுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஆகவே தரைப் படை, கப்பற் படை, விமானப்படை ஆகிய மூன்று வகைப் படைகளையும் ஜப்பானியர்கள் திரட்டி வைத்திருக் கிறார்களென்று நாம் நினைக்க இடமுண்டு. மார்ஸ்பி துறைமுகத்திற்கு எதிரில் கடும் யுத்தம் ஆரம்ப மாகி விட்டது. இன்னும் கடுமையான முறையில் இந்த யுத்தம் நடை பெறலாம். இதன் ஆரம்பத்தி லேயே ஜப்பானியர்கள் தோற்றுக் கொண்டிருக்கிறார் கள். இப்போது வெற்றி பெற்றால் மட்டுந் தான் முடிவில் இவர்கள் வெற்றி பெற முடியும். மார்ஸ்பி துறைமுகப் போராட்டம் மிகவும் முக்கியமானது தான். அது போலவே தென்மேற்குப் பசிபிக் கடல், இந்தியாவின் எல்லை புரம், சைபிரியாவின் எல்லைப் புரம், ஸ்டாலின்கிரட் தெருக்களில் நடைபெறக் கூடிய சண்டைகளுங் கூட மிகவும் முக்கியமானவை தான்.

# இந்தியாவில் படைகளுக்கு வசதிகள்.

## டில்லியில் வேவல் பிரசங்கம்.

நாளது மாதம் 3-ம் தேதி மாலே டில்லி ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகில் இந்திய பிரதம தளபதி ஜெனரல் வேவல் ஒரு மோட்டார் சிற்றுண்டிச் சாலே யைத் திறந்து வைத்தார். அப்போது அவர் கூறிய தாவது :—

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியப் படை வீரர் களுக்கு வேண்டிய வசதிகளேக் குறித்துப் பேசுவது பொருத்த மாகும். நமது கடமைகள் எவை என் றும், நம் கஷ்டங்கள் எப்படிப் பட்டவை என்றும் சுருக்கமாகத் தங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நெருக்கடியான காலத்தில் நம் கடமைகள் எவை என்று நம் படையினருக்கு நான் எடுத்துக் கூற வேண்டிய தேவையே கிடையாது. இவர்கள் நல்ல வேலே செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் பெரிதும் கடமை பட்டிருக்கிறோம். இப்போது நம் படைகளிலுள்ள ஐரோப்பியர்களும் இந்தியர் களும் சாதாரண பொது ஜனங்கள் தான். ஆனால் இராணுவ உடுப் பணிந்து கொண்டிருக்கிறார்கள். இந்த உண்மையை இந்தியாவிலுள்ள நாம் எளி தில் உணர்ந்து கொள்ளுவ தில்லே. இன்னும் ஒரு 'வாலண்டியராகத்' தான் இந்தியப் படை வீரர்கள் இருக்கிறார்கள் என்பது உண்மை தான். இந்தியப் பொது மக்கள் அனேவரின் பிரதிநிதியாகத்தான் இந்தியப் படை வீரர்கள் இன்று இருக்கிறார்கள். இப்படிப் பட்ட நிலமையில் அவர்கள் ஒரு போதும் இருந்த தில்லே. இராணுவப் பயிற்சி பெற்றவர்கள் இன்றுள்ளது போல அத்தனேப் பேர்கள் ஒரு போது மிருந்ததில்லே. பொது ஜனங்களில் பல பகுதிகளி லிருந்தும் இப்போது படையில் சேர்ந்திருப்பது போல ஒரு போதும் சேர்ந்தது மில்லே. இராணுவப் படை யினர் என்று அவர்களேக் கூறுவதை விட, பொது ஜனப் படையினர் எனக் கூறுவது தான் பொருத்த மாகும். அது போலவே, இப்போது இந்தியாவி லுள்ள பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களும் படை வீரர்களும் இராணுவத்தைச் சேர்ந்திருந்தவர்க ளல்ல, ஆனால் சிவில் உத்தியோகங்களி லிருந்த வர்கள்.

இவர்கள் தம் அலுவல்களேயும், குடும்பங்களேயும், வீட்டையும் விட்டு விட்டு பொது நன்மைக்காகப் போ ராட வந்தவர்கள். இவர்கள் அந்நிய நாட்டிற்கு வந் திருக்கிறார்கள். இந்தியாவின் சீதோஷ்ணத்தைக் குறித்தும் நிலமைகளேக் குறித்தும் அவர்களுக்குத் தெரியாது. ஆகையால், அவர்களே முழு மனதோடு வரவேற்று, கூடிய வரை உதவி புரிய வேண்டும். இவை நமது கடமைகள்.

**சில கஷ்டங்கள்.**

இனி நம் கஷ்டங்களேக் குறித்துச் சில சொல்லுகி றேன். ஏனென்றால் படைவீரர்களுக்குப் போதுமான அளவிற்கு வசதிகள் செய்யப்பட வில்லே என்று சிலர் குறை சொன்னார்கள். இந்த யுத்தம் ஆரம்பித்த முதல் $2\frac{1}{2}$ வருஷங்கள் வரை, வெளி நாடுகளில் நடைபெறும் யுத்தத்தைக் குறித்தே நாம் கவனம் செலுத்தி வந்தோம். இந்தியாவில் படைகளேத் திரட்டினோம்; பயிற்சி தந்தோம்; இந்தியாவின் பாதுகாப்புக்கு மிகவும் முக்கியமான போர்முனே களுக்கு அனுப்பினோம். இந்தியப் படைகளோடு வெளி நாடுகளுக்குப் போயிருக்கிறவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுப்பதிலேயே நம் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தோம். ஜப் பான் யுத்தத்தில் இறங்கிய உடனே, இந்தியாவிற்கு ஆபத்து உண்டாகலாம் எனத் தெரிந்து, ஏராளமான பிரிட்டிஷ் படைகளும் நேச தேசப் படைகளும் விமா னப் படைகளும் திடீரென வந்து சேர்ந்து விட்டன. இந்த ஆயிரக்கணக் கான வீரர்களுக்கும் வேண்டிய வசதிகள் செய்து கொடுப்பது சற்று கஷ்டமான காரி யந் தான். கப்பல்போக்கு வரவும் குறைவு. எனவே, இந்தப் படையினருடைய வசதிகளே முன்னிட்டு வெளி நாடுகளி லிருந்து எதுவும் தருவிக்கவும் முடிய வில்லே. இவர்களே யெல்லாம் வரவேற்றுக் களிப்பூட் டக் கூடிய இடங்கள் இந்தியாவில் இல்லே.

இது மிகவும் கஷ்டமான பிரச்சினே தான் என் றாலும், தர்ம சிந்தையுள்ளவர்களின் உதவியால் இந்த நிலமையை ஒருவாறு சமாளித்துக் கொண்டு வருகிறோம். இன்று நாம் இங்கே கூடியிருப்பதும் இதன் பொருட்டுத் தான். உத்தியோக முறையிலும், உத்தியோகப் பற்றில்லாதவரைக் கொண்டும் நாம் இந்தப் பிரச்சினேக்கு ஒரு முடிவு காண்போம். ஒரு படைவீரர் எந்த நாட்டவரா யிருந்தாலும், தம் வசதி கள், இளைப்புகள், மோட்டார் சிற்றுண்டிச் சாலேகள் ஆகியவற்றை விட எதை வெகுவாகப் பாராட்டுகிறார் கள் தெரியுமா? தமக்கு அளிக்கப்படும் வரவேற்புக் களேயும் தமக்குக் கிடைக்கும் பாராட்டுதலேயும், அந் நாட்டவர்களேப் போலவும் நண்பர்களேப் போலவும் நடத்துவதையுந் தான் பெரிதும் பாராட்டுகிறார்கள். ஏனென்றால் அவர்களும் பொது நன்மைக்காகத் தியாகம் செய்கிறார்கள். ஒரு படைவீரர் எந்த நாட்ட வராயிருந்தாலும், எந்த இனத்தவராயிருந்தாலும் என்னபதவி யிலிருந்தாலும், அவர்களே நன்கு வர வேற்று உபசரியுங்கள். இதன் பயனுக அவர்களு டைய மன நிலே உயர்வடையும்.


## விஷ அம்புகள்.

# பொய் வதந்திகள் பற்றி எச்சரிக்கை!

## அவை எதிரிகள் விடுக்கும் விஷ அம்புகள்.

உங்கள் மனதைக் குழப்பவும்
பகுத்தறிவைக் குலேக்கவும்
தவறுன வழியில் நீங்கள் நடக்கவும்
தான் இவற்றை பரப்புகிறார்கள்.

## பொய் வதந்திகளே நம்பாதீர்கள்!

ஜப்பானியர்களுக்கு விரோதமாக
தேசியப் போர் முனேயை அமையுங்கள்!

# வாழ்க ஸ்டாலின்கிராட்!

சோழ ராஜன் தர்பார் கூடி யிருக்கிறது. எண்ணற்ற ஜனங்கள் வந்து கூடி யிருக்கின்றனர். மன்னன் மகிழ்ச்சி யோடு சிம்மாசனத்தில் வந்தமர்ந்தான். ஒவ்வொருவராக அரசனுக்கு வாழ்த்துக் கூறி சன்மானம் பெற்ருர்கள். ஒவ்வொருவரும் தத்தம் திறமையைக் காட்ட வேண்டி, பிரமாதமாகப் பாமாலைகள் பலவற்றை தயாரித்து வந்திருந்தார்கள். அவை அனைத்தையும் கேட்டு அரசன் மகிழ்ந்தான். கடைசியாக வந்தாள் ஔவையார் கிழவி. 'வரப் புயர' என்று ஒரே ஒரு வார்த்தை மட்டும் கூறி விட்டு தன் இடத்திற்குச் சென்ருள். அரசனுக்கு வந்து விட்டது கோபம். மகா சூரனை தன்னைப் பார்த்து, ஔவையார் இவ்வாறு வரப்பு, கிரப்பு என்று சொன்னது, தன்னை அவமானப் படுத்துவது போலாகு மென்றே எண்ணி விட்டான் அவன். ஆகவே, ஔவையார்க் கிழவி மறுபடியும் எழுந்து, தான் சொன்ன வார்த்தைக்கு வியாக்கியானம் கூற வேண்டி வந்தது.

'வரப் புயர என்று சொன்னே னல்லவா? வரப் புயர்ந்தால் வயலிலே என்ன ஆகும்? வரப் புயர நீர் உயரும். நீர் உயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும், குடி உயர கோல் உயரும், கோல் உயர கோன் உயர்வான். ஆகவே வரப்பு உயர்வதிலிருந்து, அரசன் க்ஷேமமாகவும், புகழுடனும் வாழ்வதற்கு இட முண்டாகிறது. இதையே நான் சுருங்க கூறினேன்' என்ருளாம் ஔவையார்.

அரசன் அப்படியே பிரமித்துப் போய் விட்டானும். ஔவையாரின் வாக்குச் சாதுர்யத்தை எண்ணி, எண்ணி மகிழ்ந்தானும்.

ஔவையார் வரப் புயர என்று சொன்னதில் எவ்வளவு அர்த்தம் பொதிந்து கிடந்ததோ, அவ்வளவு அர்த்தம், 'வாழ்க ஸ்டாலின்கிராடு' என்ற இரண்டு வார்த்தைகளில் அடங்கி யிருக்கின்றது.

ஸ்டாலின்கிராடு நகரம் நாளுக்கு நாள் பாழடைந்து வருகின்றது என்பது உண்மையே! அந்நகரை அணுகும் பிரதேசங்களிலும், அந்நகரின் தெருக்களிலும் இடிந்து கிடக்கும் மாட மாளிகைகளின் மீதிலும், எண்ணற்ற சவங்கள் குவியல் குவியலாக கிடக்கின்றன. காயம்பட்டு கிடப்போரின் கதியும், செத்த பிணங்களின் கதியும் ஒன்ருகவே இருக்கிறது. இவர்களைக் கவனிப்பதற்குக் கூட அவகாச மேது?

இந்த ஒரு நகரைத் தகர்க்க மூவாயிரம் பீரங்கிகளாம்! ஐயோ! நினைத்தாலும் குடல் நடுங்குகிறதே! அல்லும் பகலும் அறுபது நாழிகையும் இந்த பீரங்கிகளின் குழாய்களில் உள்ள சூடு தணியாமலே இருக்கின்றதாம். இவற்றின் முழக்கம் ஒரு புறம்; இவற்றி லிருந்து கிளம்பும் குண்டுகளின் சப்தம் ஒரு புறம்; வானத்திலே குடை போல் பறக்கும் நாஸி விமானப் படைகளின் இரைச்சல் ஒருபுறம்; அவை உதிர்க்கும் குண்டுகள் வெடிக்கும் பயங்கர பேரிடி முழக்கம் மற்ருேர் புறம். தெருக்களில் கைச் சண்டை போடுவோரின் கோஷம் இன்னெரு புறம். நிமிஷத்திற்கு நிமிஷம் இடிந்து விழும் கட்டிடங்களின் சப்தம் வேறே! ஒரே நரக லோகக் காட்சி தான்!

நாஸிகள் நமனைப் போல் போராடுகிருர்கள் என்ருல், ருஷ்யர்கள் மார்க்கண்டேயர்களைப் போல் சமாளித்து நிற்கிருர்கள். ஸ்டாலின்கிராடுக்கான போர் ஆரம்பமாகி இரண்டு மாதங்களுக்கு மேலாகி விட்டது. ஆரம்பத்திலே இருந்த கேவலமான நிலைமையை விட, இப்போதைய நிலைமை ஒன்றும் மோசமாகி விட வில்லை என்பதே சிலரது கருத்து. ஜெர்மன் படைகளுக்கு, முன் போல் புது ஆள் உதவி வந்து சேர வில்லையாம். எப்படிடா தெரிந்தது இது என்ருல், சில தெருச் சண்டைகளில் பிடி பட்ட ஜெர்மன் கைதிகளை விசாரித்ததில், அவர்கள் எல்லாம் பாலங்களைக் கட்டுவதற்கான எஞ்சினீர்கள் என்றும், தெருச் சண்டை விஷயமே அதிகம் அறியாதவர்க ளென்றும், மேற் கொண்டு உதவி வரும் வரை போராட வேண்டு மெனும் உத்திரவோடு தாங்கள் போரி லிறங்கியதாகவும் அவர்கள் கூறினுர்களாம்.

ஸ்டாலின்கிராடு நகருக் குள்ளே நின்று போராடும் ருஷ்யர்களுக்கு, பல கஷ்டங்களுக் கிடையே, வால்கா நதி வழியாக, உணவுப் பொருள்கள் கிடைத்து வருகின்றன. அங்குள்ள படைகளில் பல ஸ்திரீகளும் இருக்கிருர்களாம். அவர்களின் தேச பக்தியும், தியாக புத்தியும் அளவிட முடியாத தாகும். வீடுகளுக் குள்ளிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்கிருர்களாம் அந்த ஸ்திரீகள். அதோடு, அக்கினித் திராவகங்களை ஜெர்மானியர் மீது கொட்டுகிருர்களாம். அவர்களது மனதில் அச்ச மென்பதே கிஞ்சித்தும் இல்லையாம்.

மாஸ்கோவி லிருந்து, உத்சாக மூட்டும் மொழிகள் ஸ்டாலின்கிராட் நகரைக் காப்பவர்கள் செவிகளுக்கு எட்டிக் கொண்டிருக்கின்றன. 'உறுதி யோடு போராடுங்கள். பின் வாங்க இட மில்லை; நீங்கள் ஜெயித்தே தீரவேண்டும்' என்று பத்திரிகைகள் கதறுகின்றன. ஸ்டாலின்கிராட் நகரி லிருந்த கணக்கற்ற தொழிற்சாலைகளில் பல காலியாகி விட்டன. பாக்கி உள்ளவற்றிலே, தொழிலாளர்கள் ஊக்கத் தோடு வேலை செய்கிருர்களாம்.

ஒரு ஆலையிலே முக மூடி யணிந்து, தடங்கலில்லாமல் தம் வேலைகளை நடத்திக் கொண்டிருந்தார்களாம் பல தொழிலாளிகள். இன்னெரு ஆலையிலே, அந்த ஆலை வாசலுக்கு தெருச் சண்டை பரவி வரும் வரை, தொழிலாளர்கள் தங்கள் வேலை மீதே கண்ணுக இருந்தார்களாம். எத்தகைய இரும்பு மனம் பாருங்கள்!

இதைக் கண்டு ஹிட்லரே பிரமிக்கிருர். அவரது சிஷ்யர்களும், இந்த ஸ்டாலின்கிராடு போரின் முக்கியத்தைக் குறைத்துக் காட்ட முயல வில்லை. ஹிட்லருக்கு ஒரு கை போலிருக்கும் கொயரிங் கூட ஒரு அழுகை அழுதிருக்கிருர்.

'பிரிட்டிஷ் விமானிகள் ஜெர்மனி மீது படையெடுத்து வந்து, நமது தொழிற்சாலைகளுக்கும், போக்கு வரத்துப் பாதைகளுக்கும், ஜெர்மன் குழந்தைகள், மற்று முள்ள மக்களுக்கும் கஷ்டங்களை உண்டாக்கும் பொழு தெல்லாம், பதிலுக்குப் பதில் சீமையிலே படு சேதத்தை விளைவித்து விட்டு வர வேண்டு மென என் மனம் ஆசைப் படுகிறது. ஆனுல், நமது விமானங்களில் பெரும்பாலானவை ருஷ்யாவில் போய் மாட்டிக் கொண்டிருக்கின்றனவே! அங்கே வேலை வெற்றிகரமாக முடிந்த பிறகு தானே, அந்த விமானங்கள் வேறு திசைக்கு வரக் கூடும்' என்று கண்ணீர் வடித்திருக்கிருர் அவர்.

ஒரு நாளைக்கு ஒரு டிவிஷன் வீதம் (ருஷ்யப் போர் முனைகள் அனைத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டால்) ஜெர்மானியருக்கு நஷ்ட மேற்பட்டு வருகிறதாம். இப்படியே போய்க் கொண்டிருந்தால், ஜெர்மனியால் எத்தனை காலம் தான் தாக்குப் பிடிக்க முடியும்? ஒரு கட்டத்திலே, போர் முனையில் நிற்பவர்கள் புது உதவியைப் பெருது, வெகு தூரம் முன்னேறிச் சென்று, திடீரென மாட்டிக் கொண்டு முழிக்கவும் நேரிடலாம்.

மொத்தத்திலே ருஷ்யர்கள் மீது தான் ஜெர்மனியின் மூல சக்தி முழுவதும் பிரயோகிக்கப் பட்டிருக்கிறது. அந்த மூல சக்தியை, நிகரற்ற தியாகங்களைச் செய்து வீர ருஷ்யர்கள் மளமள வெனக் குறைத்து வருகிருர்கள். உலக சரித்திரத்திலேயே அதி பயங்கரமானதாகவும், மிகப் பெரியதாகவும் கருதக் கூடிய போர்கள் ஸ்டாலின்கிராடில் நடந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பேருதவிக்கு, ருஷ்யர்களுக்கு நேச தேசத்தார் பெரிதும் கடமைப் பட்டிருக்கிருர்கள். நேச தேசத்தார் எதிர் பார்க்கும் இறுதி வெற்றியைப்

பெற்றளிக்க ஸ்டாலின்கிராடு போர் பெரிதும் உதவி செய்வ தாகிறது.

ஸ்டாலின்கிராடு சமாளித்து நின்று, அங்கிருந்து ஜெர்மானியர் விரட்டி யடிக்கப் பட்டு விட்டால், அதை விட அமோகமான தோர் வெற்றி இந்த இரண்டாவது மகா யுத்தத்திலேயே இருக்க முடியாது.

இரு கட்சியினரும் இந்நகரப் போரில் அயர்ந்து போயிருக்கிருர்கள். வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்து போய்க் கொண்டிருக்கின்றன. நகரில் சிக்கிக் கொண்டு நகரைப் பாது காக்கப் போராடும் படைகளுக்கு உதவி செய்ய, மார்ஷல் டிமோஷிங்கோ, நகரின் வடமேற்கிலே ஒரு பலமான தாக்குதலை ஆரம்பித்து வைத்திருக்கிருர். பலமான எதிர்ப்பு இருந்த போதிலும், இந்தத் தாக்குதல் ருஷ்யர்களுக் குச் சாதகமாகவே இருந்து வருகிறது. இதே மாதிரி ஸ்டாலின்கிராடிற்குத் தெற்கிலும் ருஷ்யர் தாக்க ஆரம்பித் திருக்கின்றனர். ஜெர்மானியரிடம் ஸ்டாலின்கிராடைப் பறி கொடாது காக்கலாம் என்ற நம்பிக்கை ருஷ்யர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. 'எங்கள் மாஞேதிடம் எவருடைய மஞேதிடத்திற்கும் மட்டானதல்ல! நாஸிகளுக்கு லேசில் பணிந்து விட மாட்டோம் நாங்கள்' என்று ஸ்டாலின் கூறி யிருக்கிருர்.

இதை எல்லாம் உத்தேசித்தே, சுருக்கமாகவே, 'வாழ்க ஸ்டாலின்கிராடு' என்று வாழ்த்த விரும் பிஞேம். ஸ்டாலின்கிராடு வாழ்வதால், ருஷ்யா வாழும். ருஷ்யா வாழ்வதால், ஜப்பானின் கை கீழக்கே அதிகமாக ஓங்காது. அவ்வளவுக் கவ் களவு ஜெர்மானியருக்குக் கஷ்டம். ஜெர்மானியருக் குக் கஷ்டம் என்ருல், நேச நாட்டினருக்குக் கொண் டாட்டம் தானே!

---

# ஆஹா ! இது என்ன புதுமை !

நியூ கினியா என்பது ஆஸ்திரேலியா அருகே இருக் குமோர் பெரிய தீவு. இதிலே தானிருக்கிறது போர்ட் மார்ஸ்பி என்ற முக்கியமான துறைமுகம். இத் துறைமுகத்தை எப்படியாவது பிடித்து விட வேண்டு மென ஜப்பானியர்கள் சென்ற சில மாதங்களாக முக்கு முக்கு என்று முக்குகிருர்கள். ஒன்றும் பலிக்க வில்லே. இந்த மார்ஸ்பி துறைமுகத்தை ஜப்பானி யர் பிடித்துக் கொண்டால் ஆஸ்திரேலியாவைத் தாக்க அவர்களுக்கு அதிய சௌகரியம் கிடைத்தது போலா கும். இதை உணர்ந்தே ஆஸ்திரேலிய வீரர்கள் இத் துறைமுகத்தை வெகு ஜாக்கிரதையாகவே காத்து வருகிருர்கள்.

சமீபத்தில் ஜப்பானியர் இந்தத் துறைமுகத்திற்கு முப்பது மைல் வரை சமீபித்து விட்டார்கள்.

ஆனுல் ஒரு வேடிக்கை பாருங்கள். சென்ற வாரம் ஆஸ்திரேலிய வீரர்கள் வந்தது வருகிற தென இந்த ஜப்பானியரை எதிர்க்க வேண்டி முன்னேறித் தாக்கி னர். ஆனுல் அத்தனே பேர்களும் ஏமாற்ற மடைந்த னர். மளமள வென முன்னுலே போய்க் கொண்டே இருக்கிருர்கள். ஒரு துப்பாக்கிக் குண்டு கூட செலவாக வில்லே. கண் எட்டிய வரை ஜப்பானியரே தென்பட வில்லே. எதிர்ப்பே கொஞ்சம் கூட இல்லே. அதைக் கண்டு ஆஹா! இது என்ன புதுமை! என்று ஆஸ் திரேலிய சோல்ஜர்கள் பாடி யிருக்கக் கூடும்.

இம்மாதிரி தாங்கள் இருந்த இடத்தை துப்புர வாகக் காலி செய்து கொடுத்து விட்டு, அப்படி எங்கே போய் விட்டார்கள் ஜப்பானியர்கள்? இது ஒரு முக்கிய மான கேள்வி தான்!

சாலமன் தீவுகள் என்பது நியூ கினியாவிற்கு அடுத் தாப் போல் உள்ளவை தான். அந்த சாலமன் தீவு களில் சில இடங்களில்தான் அமெரிக்கர்கள் சென்று இறங்கி யிருக்கிருர்களே! அவர்களே விரட்டும் நோக் கத்துடனே சாலமன் தீவுகளே ஜப்பானியர் அடிக்கடி தாக்கி வருகின்றனர். அவர்களுடைய கப்பல்களே அமெரிக்க நேசதேச விமானங்கள் 'படார்! படார்' என்று வெடித்து மூழ்கச் செய்து வருகின்றன. இப் படியாக சாலமன் தீவுகளிலும், நியூ கினியா தீவிலும் ஏககாலத்தில் சண்டை போடுவதில் பல சிரமங்களே ஜப்பானியர் அநுபவித் திருக்கக் கூடும். ஆகவே, நியூ கினியாவில் தங்கள் வேலேயைக் குறைத்துக் கொண்டு அங்கிருக்கும் படைகளே வேறு இடங்களுக்கு அழைத் துப் போயிருக்கக் கூடும். அவர்கள் எங்கு போனுல் தான் என்ன? அகலக் கால் வைத்து விட்டார்கள் ஜப்பானியர். ஆயிரக் கணக்கான மைல்களுக் கப்பால் பல்லாயிரக் கணக்கில் ஜப்பானிய வீரர்கள் இருக்கிருர் கள். அவர்களேப் பட்டினி போட முடியுமா? புதிது புதிதாக அவர்களுக்கு உதவி அனுப்பாம லிருக்க முடியுமா? வெகு காலம் சும்மா வைத்துக் கொண் டிருக்க முடியுமா? சீனுவில் சீனர்கள் தங்களுடைய அபாரமான கஷ்டங்களே எல்லாம் லக்ஷ்யம் செய்யாது குறைந்த பக்ஷமுள்ள தொழிற்சாலேகளி லிருந்து உற் பத்தியாகும் சாதனங்களேக் கொண்டு தீர மனதுடன் பல் மடங்கு பலசாலிகளான ஜப்பானியரைச் சலியாது எதிர்த்து நிற்கிருர்கள். இப்படிப் பட்ட வஜ்ஜிர மன சுள்ள சீனுவும், இரும்பு மனசுள்ள ருஷ்யாவும் மட் டும் இல்லா திருந்தால் இந்த யுத்தம் எப்பவோ கோவிந்தா ஆகி யிருக்கும்!

யுத்தத்தைத் தொடங்கி ஐந்தாறு மாதங்களாகு முன் சண்டப் பிரசண்டமாக அடித்து வாங்கிய ஜப்பா னியர், இப்பொழுது தாமாகவே பல இடங்களேக் காலி செய்து வருவது புதுமையிலும் புதுமையாகவே இருக் கிறது.

ஒரு வேளே அவர்கள் சீர் குலேந்து போன தங்கள் விமானக் கப்பல் பலங்களேச் சரிப்படுத்திக் கொண்டிருக் கிருர்களோ என்னமோ? விரோதியின் சக்தியை என்றும் குறைத்துப் பேசாதே என்ருெரு பழமொழி உண்டு. அதன்படி ஜப்பானின் சக்தியை குறைவாக எண்ணி விடுவதற்கும் இல்லே. ஜெனரல் வேவலே ஜப்பானியரின் திறமையைக் குறைத்துப் பேச வில்லே. எண்ணிக்கையில் ஜப்பானிய விமானங்கள் குறைவாக இருக்கலாமே ஒழிய, அவ்வாறு குறைந்திருக்கும் விமானங்களேக் கையாளுவோரின் சமர்த்து ஒன்றும் குறைந்ததாக இல்லே என்று அபிப்பிராயம் தெரி வித்திருக்கிருர் வேவல். குள்ளன் பலே குள்ளன் தான்! அதி முக்கியமான பர்மாவை அவன் பிடித்துக் கொண்டான். ஆகவே இந்தக் குள் ளனே முதலில் பர்மாவி லிருந்து துரத்த வேண்டும். இது விஷயத்தில் அதிகாரிகள் கவனஞ் செலுத்தி வரத் தான் செய்கிருர்கள். நேசதேச விமானங்கள் பர்மா மீது அடிக்கடி பறந்து சென்று ஜப்பானிய ராணுவ நிலேயங்களேத் தகர்த்து வருகின்றன. ஜப் பாஞே இங்கும் அதிகம் வாலாட்டாது, 'கம்' என்றிருக்கிறது. இதைப் பார்த்தாலும் இது என்ன புதுமை என்றே சொல்லத் தோன்றுகிறது.

ஒரு மைனர் இருக்கிருர். பாங்கியில் அவருக்குக் கொஞ்சம் பண மிருக்கிறது, வயல்களும் இருக்கின் றன. அவர் குடி, கூத்தியார் விஷயங்களுக்காக ஆரம்பத்தில் தாம் தூம் என்று செலவழிக்கிருர் என்று வைத்துக் கொள்ளுங்கள், பாங்கியிலும் பணம் தீர்ந்துபோய், வயல் அறுவடை ஆவதற்கும் காலம் வர வில்லே என்ருல், மைனர் என்ன செய்வார்? ஆடிப் பாடி ஓய்ந்து வீட்டிலே அடைந்து கிடப்பா ரல்லவா? அதே போல் தான் தப்பு வழியில் இறங்கி யிருக்கும் ஜப்பானும் ஆரம்பத்தில் அட்டகாசம் செய்து விட்டு தனது நிலேமையைச் சீர்திருத்திக் கொள்ள அடக்க ஒடுக்கமாய் நல்ல பிள்ளே போலிருக்கிறதோ என்னமோ? விடிந்தால் தெரிகிறது வெளிச்சம்.

## பெல்ஜியத்தில் ஜெர்மானியர் திண்டாட்டம்.

பெல்ஜியம் இப்போது ஜெர்மானியர் கையில் இருக்கின்றது. என்றாலும் உண்மைத் தேசபக்தர்களான பெல்ஜியர்கள், தம் அரசாங்கத்தை லண்டனி லிருந்து நடத்தி வருகிறார்கள். இவர்களுக்கு பெல்ஜியத்தி லிருந்து சில தகவல்கள் கிடைத் திருக்கின்றன. இவற்றி லிருந்து, அங்கே நடைபெறும் ஜெர்மன் ஆட்சிக்கு விரோதமாகப் பெருங் கிளர்ச்சிகளும் கலவரங்களும் நடை பெறுவதாகத் தெரிகிறது.

நாள் தோறும் எங்கேனும் ஒரு இடத்தில் ஆர்பாட்டம் நடந்து கொண்டிருக்கிறது. இங்கே சில இரகசிய ஸ்தாபனங்கள் வேலை செய்து கொண்டிருக்கின்றன. இவை திருட்டுத் தனமாக சில பத்திரிகைகளும் நடத்திக் கொண்டிருக்கின்றன. ஜெர்மானியர்கள் மீது பெல்ஜியர்களுக்கு ஏற்கெனவே கடுங் கோப முண்டு. இந்தப் பத்திரிகைகள் இந்தக் கோபத் தீயை வளர்க்கின்றன.

ப்ரஸெல்ஸ் நகருக்கு வட மேற்கே ஒன்பதாவது மைலில் ஆஸ்ச்சி என்ற ஒரு ஊர் இருக்கின்றது. இதை யடுத்து ஒரு தொழிற்சாலை. இங்கே ஆஸ்பால்ட் செய்து கொண்டிருந்தனர். சில நாட்களுக்கு முன்பு இத் தொழிற்சாலையில் தீப்பற்றிக் கொண்டது. இதை அணைக்க பல மணி நேரம் ஜெர்மன் படைகள் தீயோடு போராட வேண்டி யிருந்தது. அப்படி யிருந்தும் அத்தொழிற்சாலை அடியோடு நாசமானது.

ஜெர்மன் ரகசியப் போலீஸ் ஏஜெண்டுகள் சுமார் 2,000 பேர்கள் ப்ரஸ்ஸெல்ஸ் பகுதியில் மட்டும் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களை விடக் கொடுமையானவர்கள் 'பீல்ட் ஜெண்டர்மரி'. இவர்களையும் ஏராளமாக ஜெர்மானியர்கள் அங்கே வைத்திருக்கிறார்கள். இவர்களில் மாஜி படை வீரர்கள், சென்ற மகா யுத்தத்தில் போராடிய பழைய பேர்வழிகள், ஆகியோர் சேர்ந்திருக்கின்றனர். நேச நாடுகள் ஸான்ஸ் நகரைக் கைப்பற்றிய காலத்தில் அரசியல் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டவர்களும் இதில் சேர்ந்திருக்கிறார்கள்.

பெல்ஜியத்தி லுள்ள நாஜிஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்த வர்களை இடைவிடாது தாக்கிக் கொண்டே யிருக்கிறார்கள் பெல்ஜியர்கள். பெல்ஜியன் தேசீய வீரர் ஒருவர் சமீபத்தில் ஜெர்மன் காவல் படையைச் சேர்ந்த இருவரைக் கொன்று விட்டார். நாஜி முறைப் படி அவர்களுடைய சவங்களை அடக்கம் செய்தனர். அந்தச் சவச் சடங்கின்போது அங்கே நின்று கொண்டிருந்த ஒரு கிழவர் சவத்திற்கு வணக்கம் செய்ய வில்லை. உடனே காவலாளிகள் அவரைக் கைது செய்தனர். இந்தச் சம்பவத்தை, அதற் கடுத்திருந்த ஒரு வீட்டின் ஜன்னலி லிருந்து பார்த்துக் கொண்டிருந்த ஒரு பெண் 'மிருகங்கள்!' என்று ஜெர்மன் காவற்படையினரைக் கூவினார். உடனே அக்காவற் படையினர் அவ்வீட்டிற்குள் புகுந்தார்கள். சில நிமிஷங்களுக்குள் அந்த வீட்டையே நாசம் செய்து விட்டார்கள்.

ப்ரஸெல்ஸில் ஜெர்மனியர்களுக்காக ஒரு கம்பெனி நடந்து கொண்டிருந்தது. அந்தக் கட்டிடத்தி லிருந்த ஒரு ரேடியேட்டர் மேலே யாரோ ஒரு வெடி குண்டை வைத்திருந்தார்கள். அது வெடித்து அந்தக் கட்டிடமே தரை மட்டமானது. அதிலிருந்த 8 பேர்கள் இறந்து போனார்கள். அதே சமயத்தில் டெலிபோன் கம்பங்களில் சோவியத் கொடிகளை ஏற்றி யிருந்தனர். அவற்றை, தீயணைக்கும் படையினர் அப்புறப்படுத்தினர். என்றாலும், உடனே மீண்டும் அங்கே சோவியத் கொடிகள் பறந்தன. கம்யூனிஸ்ட்களில் 100 பேர்களை நாடு கடத்தி விடுவது என்று ஜெர்மானியர்கள் தீர்மானித் திருக்கிறார்கள். இவர்கள் ப்ரஸெல்ஸ், ஜலீஜ். நான்ஸ் ஆகிய ஊர்களி லுள்ள போக்கு வரவுச் சாதனங்களையும், பேசுந் தந்திகளையும், தொழிற்சாலைகளையும் அரசாங்கத்திற்கு விரோதமாக உபயோகித்தார்கள் என்பது தான் அவர்கள் மேல் சுமத்தப்பட்ட குற்றம். சான்ஸுக்கு அருகில் ப்ரே, ஹவேர் என்னும் ஊர்கள் இருக்கின்றன. அங்கே கடும் பஞ்சம். எனவே, இவ்வூர்களின் தொழிலாளர்கள் வசிக்கும் பகுதிகளிலும், பலத்த ஆர்பாட்டங்கள் நடை பெற்றன.




ஐரோப்பாவில் ஜெர்மானியர் கைப் பற்றி யுள்ள நாடுகளிலும் சரி, சீனாவில் ஜப்பான் கைப் பற்றி யுள்ள நாடுகளிலும் சரி, செழிப் போங்கி செங்கதிர் பூத்து நிற்கும் விளை நிலங்களை யெல்லாம் பகைவர்கள் அறுவடை செய்து அனுபவித் தாண்டு வர, அந்தத் தேச மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக பட்டினி கிடந்து மடிகிறார்கள். என்னே கோரக் காக்ஷி! விவசாயத்தையே ஜீவ மூலாதாரமாகக் கொண்டுள்ள நம் தாய் நாட்டிற்கும் இது போன்ற கொடிய கதி நேர, நாம் கண்டு சகித்திருப்பதா? நீர் வளம் நில வளம் மிகுந்து, சகல நற் சீர்களுடனும் விளங்கும் இத் திரு நாடு, எதிரிகள் கண்களை மிகக் கவர்ந்து நிற்பதில் அதிசயமொன்று மில்லை. பசப்பு வார்த்தைகளால் நம்மை மதி மயக்கி அவர்களுக்குப் பணியச் செய்யப் பார்க்கிறார்கள் ஜப்பானியர்கள். உஷார்! ஏமாந்து மட்டும் போகாதீர்கள்! எல்லோரும் கையும் மெய்யு மொத்து, நம் பூரண பலத்துடன் இக்குள்ளர்களுக்குச் சரியான பாட மொன்று கற்பிப்போம். இவர்களை இங்கு நுழைய விட்டோமானால், நம் பெண்டிர் பிள்ளைகளின் கதி, முற்றும் பட்டினி முழுப் பட்டினி யல்லோ ஆகி விடும்!

**ஜப்பானியருக் கெதிராக**
**தேசீயப் போர்**
**முனையை**
**அமையுங்கள்.**

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.